சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 52/2015

பெயர் திரு. சீனுவாசன் த/பெ. பார்த்தசாரதி நாள். 26.11.2025

**வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இவ்வழக்கில் நான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். இவ்வழக்கில் ஆஜராவதற்கு முதன் முதலில் எனக்கு அழைப்பாணை வந்தது. இவ்வழக்கில் ஆஜராகி நான் வழக்கை நடத்தவில்லை. வழக்கு எத்தனை இன சொத்துக்களுக்கு என்று எனக்கு தெரியாது. புல எண்கள் தெரியுமா என்றால் 10 புல எண்கள் வழக்கில் உள்ளது. தற்பொழுது சாட்சி 10 அல்லது 15 இருக்கும் என்கிறார். நல்லூர் கிராமத்தல் எனக்கு வீடு உள்ளது. அந்த வீட்டின் புல எண். 230 ஆகும். அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 85 சென்ட் ஆகும். அதில் தான் 1ம் பிரதிவாதி மெத்தை வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீட்டை 2010ல் 1ம் பிரதிவாதி கட்டியுள்ளார். அதே புல எண்ணில் தான் நான் மெத்தை வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

2) புல எண். 230/3ஏ ல்1ஏக்கர் 85 சென்ட்டில் நான் வீடு கட்டவில்லை. அதே புல எண்ணில் நான் வேறு இடத்தில் வீடு கட்டியுள்ளேன். நான் தனியாக சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதே போல் 1ம் பிரதிவாதியும் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய சொத்துக்களை விற்றுவிட்டேன். கப்பிவாக்கம் கிராமத்தில் புல எண்.231/4சி13 96 சென்ட் 1ம் பிரதிவாதியால் கிரயம் பெறப்பட்டது என்றால் என் தகப்பனார் அவர் பெயரில் வாங்கி வைத்தார். அந்த கிரயம் 1983ல் கோபால் என்பவரிடம் இருந்து வாங்கப்பட்டது. அந்த சொத்து 1ம் பிரதிவாதியால் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட சொத்து என்றாலும், அது என் தகப்பனாரால் வாங்கி வைக்கப்படவில்லை என்று

சொன்னாலும் சரியல்ல. அந்த கிரய ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அந்த கிரயத்தை என் தகப்பனார் வாங்கி வைத்ததாக என் முதல் விசாரணையில் சொல்லவில்லை.

3) புல எண். 232/1 பி –ல் 2 ஏக்கர் 4 செண்ட்டை 1ம் பிரதிவாதி கிரயம் பெற்றாரா என்றால் என் தந்தை அவர் பெயரில் கிரயம் பெற்றார். அந்த 2 ஏக்கர் 4 செண்ட்டை பொறுத்து 1ம் பிரதிவாதி பாகம் பிரித்துக் கொடுத்தார். அதில் என் பாகமாக 96 செண்ட் 1ம் பிரதிவாதி கொடுத்தார் என்றால் சரிதான். அதில் 29 செண்ட்டை நான் விற்றுவிட்டேன் என்றால் 1ம் பிரதிவாதியும் சேர்த்து தான் விற்றார். அதனை முரளி என்ற வெளியூர் நபருக்கு விற்றோம். மீதி நிலத்திற்கு என் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அதன் புல எண். 232/1பி 3ஏ1 என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கிய பாகம் புல எண்.232/1பி 5ஏ2 என்றால் சரிதான். 02.09.2001ல் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே பரிவர்த்தனை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பரிவர்த்தனை படி எனக்கு பாகத்தில் வந்த 232/1பி5–ல் 94 செண்ட்டில் 47 செண்ட்டை 1ம் பிரதிவாதிக்கு பரிவர்த்னை செய்தேன் என்றால் சரிதான். அந்த பரிவர்த்தனையில் 1ம் பிரதிவாதி புல எண்.231/4 சி13–ல் 48 செண்ட் எனக்கு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த 48 செண்ட் எனக்கு மட்டுமே பாத்தியம் என்றாலும், அதில் வேறு யாருக்கும் பாகம் இல்லை என்றாலும் சரிதான். நான் 1ம் பிரதிவாதி கொடுத்த 47 செண்ட் நிலம் அவருக்கு மட்டுமே உரிமையானது என்றால் சரிதான்.

4) 2 ஏக்கர் 4 செண்ட்டில் 94 செண்ட் போக மீதமுள்ள சொத்து 1ம் பிரதிவாதிக்கு தான் பாத்தியம். புல எண்.231/4 சி6–ல் 7 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதிதான் கிரயம் வாங்கினார் என்றால் 8 செண்ட் நிலத்தை என் தகப்பனார் வாங்கி வைத்தார். என் தகப்பனார் கிரயம் வாங்கி வைத்தார் என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை. 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்து, நான் வாங்கிய

சொத்து ஆகியவை அவரவர் தனிப்பட்ட சொத்து என்றாலும், அதில் வாதிக்கு எவ்வித பாகமும் கிடையாது என்றால் சரியல்ல. என் தகப்பனார் வாங்கி வைத்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.